| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 17/04/2024 | முதல் | 21/04/2024 | |
| அறிக்கை எண் : | 031/ 2024 | வெளியீட்டு நாள் : | 16/04/2024 | | | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.04.2024 முதல் 15.04.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-04-2024- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/04 | 12/04 | 13/04 | 14/04 | 15/04 | தேதி | நாள்-1 17/04 | நாள்-2 18/04 | நாள்-3 19/04 | நாள்-4 20/04 | நாள்-5 21/04 |
| 0.0 | 0.2 | 3.0 | 1.5 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 38 | 37 | 38 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 38 | 39 | 39 | 38 |
| 26 | 28 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 28 | 28 | 28 | 28 |
| 5 | 5 | 6 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 7 | 4 | 5 |
| 67 | 72 | 78 | 76 | 76 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 70 | 70 | 70 | 70 |
| 44 | 67 | 53 | 40 | 45 | | 20 | 20 | 20 | 20 | 20 |
| 13 | 17 | 12 | 15 | 13 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 16 | 16 | 14 |
| கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 16 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

[illegible]

[illegible]

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (17.04.2024 முதல் 21.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெள்ளரி, மக்காச்சோளம், கால்நடை.**

**வெள்ளரி:**

வெள்ளரி பயிரில் இலைத் துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் அறிகுறியாக இலைகள் துளைக்கப்பட்டு வெண்ணிற கோடுகள் இலைகளில் காணப்படும்.

நாளடைவில் இலை வாடிக் காய்ந்து உதிர்ந்துவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 5கிராம் என்ற அளவில் தையோமித்தாக்சம் 25 சத மருந்தினைக் கலந்து தெளிக்க வேண்டும்.

**மக்காச்சோளம்:**

மக்காச்சோள மேக்சிம் பூஸ்டரினை மக்காச்சோள பயிருக்கு ஏக்கருக்கு 3 கிலோ என 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஆண் மஞ்சரி மற்றும் மணி உருவாகும் பருவத்தில் தெளிக்கவும். கூடுதலாக ஒட்டும் திரவம் சேர்த்து கொள்ளவும்.

இதனால் மணி பிடிக்கும் திறன் அதிகரிக்கும், விளைச்சல் 20 சதம் வரை அதிகரிக்கும் மற்றும் வறட்சியை தாங்கி வளரும்.

**கால்நடை:**

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரித்தல் மிகவும் அவசியமாகும்.

கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாகவும் அதே நேரத்தில் சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறும் அமைக்க வேண்டும்.

அதாவது கொட்டகைகளின் நீள வட்டம் கிழக்கு மேற்காக அமைவது நல்லது. வேகமாக காற்று வீசும் இடங்களில் மரங்கள் வளர்த்தால் காற்றின் வேகத்தை ஓரளவு குறைக்க உதவும்.